From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 5/2017

Deposition of witness for: PW - 8

| | | | |
|---|---|---|---|
| Name | : அம்பிகா | Father/Husband Name | : அமல்சுந்தரராஜ் |
| Age | : | Calling | : |
| Date | : 16.12.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 16 day of 12.2025.

**Witness appeared through VC on Microsoft Teams virtual Platform on link shared from court**

**Staring Time:**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

எதிரிகள் ஆஜர்

**Starting time: 03.25 P.M**

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் கடந்த 2016ம் ஆண்டு மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்று தற்போது திண்டுக்கல்லில் குடியிருந்து வருகிறேன். 15.02.2014 அன்று 14.30 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது ராஜலெட்சுமி க/பெ. திருமால் மணி என்பவர் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து தொலைபேசி மூலம் தகவலை பெற்று பின்னர் காவல் நிலையம் வந்து புகார் கொடுத்ததன்பேரில் நிலைய குற்ற எண் 10/16 பிரிவுகள் பெண்கள் துன்புறுத்தலை தடுக்கும் சட்டபிரிவு 4 மற்றும் இதச பிரிவு 506(1)ன்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டது** ) பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இணைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜலெட்சுமி மற்றும் ராமமூர்த்தி, மலேஸ்வரி, ஜெயராமன், இந்திரன், ராமசாமி, பஞ்சு,

ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது புலன்விலசாரணயில் 4ம் எதிரி சபரி என்பவர் வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என எனது புலன்விசாரணையில் தெரியவருவதால் எதிரியை நீக்கம் செய்து 15.02.2016 ம் தேதித எதிரி நீக்கல் அறிக்கை தாக்கல் செய்தேன். **(அந்த எதிரி நீக்கல் அறிக்கை அசாஆ 3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டது ).** பின்னர் வழக்கு சம்பவத்தில் தொடர்புடைய மற்ற எதிரிகள் மீது பெண்கள் துண்புறுத்தலை தடுக்கும் சட்டம் பிரிவு 4 மற்றும் இதச பிரிவு 506(1)ன்கீழ் 20.03.2016 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

குறுக்குவிசாரணை இல்லை.